2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாதது.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள்.

வினா எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைசசர் அவர்கள்.

34—

கட்டட வசதி

***11106—திரு. எல்.பி. தர்மலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டு, கட்டடப் பணி 31-5-2007-க்குள் முடிக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே இருக்கின்ற பதிவுத் துறை அலுவலகம் மிகக் குறுகிய, சிறிய கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதைப் புதிய கட்டடமாக இந்த ஆண்டு கட்டித் தர அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை

நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும். பதிவுத் துறை அலுவலகத்திற்கு அருகில் அரசுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் அல்லது தானமாக இடம் கொடுக்கப்பட்டாலும், இதனைப் பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

35—

தொழிற்பேட்டை

*2169— **திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் தற்போது புதிதாய்த் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் சிட்கோவின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில், கடந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே, சிப்காட் தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான ஆணைகள் வழங்கப்பட்டன. அந்தத் தொழிற்சாலையை உடனடியாகத்